**PRESS NOTE**

On Appeal against acquittal Hon'ble High Court convicted Tr.V.Ashok Kumar, Retd., Office Superintendent, PR Section for 18 months for demand and acceptance of bribe Rs.2000/-.

The complainant Tr.S.S.Shanmugam worked as Sub- Inspector of Police in F2 Egmore Police Station, Greater Chennai Police. On 09.02.2003, the complainant entered on Medical Leave without intimation. For his long period of absence, he was served with a deserter order and Punishment Roll was initiated and the charge was proved against the complainant. On 30.10.2005 Government issued the punishment orders allowing him to retire with deduction of Rs.500/- per month for two years. The complainant had given an appeal petition against this Government order on 12.02.2008 through proper channel.

In this connection the complainant used to visit the office Superintendent, Punishment Roll Section of Joint Commissioner Office, Central zone, Chennai to know about the stage of his appeal petition. On 24.12.2008 when he met the office Superintendent he reiterated his earlier demand of bribe amount Rs.2000/- from the complainant for the speedy action of his petition to the Government. As he was not willing to give the demand amount, he lodged complaint in DVAC on 24.12.2008 and trap was organized against office Superintendent and he was arrested and sent for remand.

The trial was conducted before the Hon'ble Special Judge for cases under prevention of Corruption Act Chennai and acquitted the accused against his offence on 31.07.2013. In continuation of acquittal DVAC filed Appeal against Acquittal before the Hon'ble High Court Justice Chennai. Finally, today 27.02.2023 the accused was convicted for 6monthsRigorous Imprisonment for the offence u/s 7 of PC Act 1988 and 1 Year Rigorous Imprisonment for the offence u/s 13 (1) (d) of PC Act 1988 by the Hon'ble High Court Justice Chennai. The sentence shall run consecutively.

## <u>பத்திரிக்கை செய்தி</u>

**<u>முன்னாள் தண்டனை பிரிவு அலுவலக கண்காணிப்பாளர் தண்டனை பட்டியல் கோப்பை அரசுக்கு விரைந்து அனுப்ப லஞ்சமாக ரூ.2000/- பெற்ற குற்றத்திற்காக விடுதலைக்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கில் 18 மாதம் கடுங்காவல் தண்டனை உயர்நீதிமன்றம் தீர்ப்பு.</u>**

புகார்தாரர் திரு.சண்முகம் என்பவர் சென்னை எழும்பூர், எப்-2 எழும்பூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார். 09.06.2003ம் தேதி அன்று தீடீர் என்று உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவ அதிகாரியின் அறிவுரையின் பேரில் தன்னிச்சையாக மனநல மருத்துவரிடம் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இது பற்றி தகவல் தெரிவிக்காமல் நீண்ட நாட்கள் ஆஜரின்மையில் இருந்ததால் விட்டோடியாக ஆணை பிறப்பிக்கப்பட்டு, சார்வு செய்யப்பட்டது. இந்த தண்டணை புகார்தாரருக்கு எதிராக நிரூபணம் ஆகியுள்ளது. மேலும் தமிழக அரசால் குற்ற விசாரணை முடிக்கப்பட்டு 30.10.2005ம் தேதியில் இருந்து ஓய்வுபெறுவதற்கு அனுமதித்து, விட்டோடியாக இருந்தமைக்கு தண்டணையாக மாதம் ரூ.500 வீதம் 2 வருடங்கள் பென்சன் பணத்தில் இருந்து பிடித்தம் செய்து கொள்ள வேண்டும் என்று தனக்கு அரசு ஆணை சார்வு செய்யப்பட்டது.

இந்த குற்றச்சாட்டில் இருந்து விடுவிப்பதற்கு தமிழக அரசு உள்துறை செயலாளருக்கு 12.12.2008 ஆம் தேதி உரிய முறையில் விண்ணப்பிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக விண்ணப்பத்தை சென்னை இணை ஆணையாளர், மத்திய மண்டலம் அவர்கள் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டதா என்பதனை தெரிந்து கொள்ளும் பொருட்டு சென்னை இணை ஆணையாளர், மத்திய மண்டலத்தில் உள்ள தண்டனை பிரிவு (PR-Section) சென்று கண்காணிப்பாளர் திரு.அசோக்குமார் அவர்களை 24.12.2008ம் தேதி

சந்தித்துள்ளார். அதற்கு அவர் தண்டனை பட்டியலை விரைந்து அரசுக்கு அனுப்ப ரூ.2000/-ம் லஞ்சம் கேட்டதாகவும், தனக்கு லஞ்சம் கொடுக்க மனம் இல்லாத காரணத்தினால் மேற்படி கண்காணிப்பாளர் திரு.அசோக்குமார் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கும்படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் 24.12.2008 அன்று புகார் கொடுத்தன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து எதிரி மீது பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான வழக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு சிறப்பு நீதிமன்றம், சென்னையில் நடைபெற்று வந்த நிலையில் 31.07.2013ம் தேதி எதிரி மீது குற்றம் நிரூபிக்கப்படவில்லை என தீர்ப்பு வழங்கியது. அதனை தொடர்ந்து சென்னை உயர் நீதிமன்றத்தில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை மூலம் வழக்கு மேல் முறையீடு செய்யப்பட்டு (Crl. Appeal No.125/2014, dated 14.03.2014) வழக்கு நடைபெற்று வந்தது.

இவ்வழக்கில் இன்று 27.02.2023 குற்றவாளி திரு.அசோக்குமார் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் நிரூப்பிக்கப்பட்டு அவருக்கு சட்டப்பிரிவு 7 of PC Act 1988 க்கு 6 மாதங்கள் கடுங்காவல் தண்டணையும், சட்டப்பிரிவு 13 (1) (d) of PC 1988 க்கு 1 வருடம் கடுங்காவல் தண்டணையும் விதித்து மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது.